திரு. அ. தேவேந்திரன் : தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களை பரவலாக டிசென்டிரலைஸ் செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டதே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் குழு பெரிய அறிக்கையைக்
மு.ப. 9-30 கொடுத்திருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், சமீபத்திலே ஒரு நீதிபதி பஸ்ஸிலே போய்க்கொண்டிருந்தபோது, அங்கு அவரால் தண்டிக்கப்பட்ட குற்றவாளியின் சொந்தக்காரர் பஸ்ஸிலேயே அந்த நீதிபதியை அடித்து விட்டார். ஆகவே, நீதிபதிகளுக்கு, டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட், சப்-மாஜிஸ்டிரேட், இவர்களுக்கெல்லாம், வாகன வசதியும், வீட்டு வசதியும் உடனடியாகச் செய்து கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வீட்டு வசதி, இந்தியாவிலேயே, தமிழ் நாட்டிலேதான் எல்லா மாவட்டங்களிலேயும் உள்ள நீதிபதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. வாகன வசதி கொடுக்க முடியாது என்பது அங்கத்தினருக்கே தெரியும். காரணம், ஏராளமான செலவு அரசுக்கு ஏற்படும்.

ஜெயங்கொண்ட சோழபுரத்திற்கு முன்சீப் நீதிமன்றம்

* 89 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டசோழபுரத்தில் டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட் ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : நீதிமன்றங்களின் விசாரணை அதிகார வரம்பு குறித்த குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர், ஜெயங்கொண்டசோழபுரத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றை அமைப்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

திரு. செ. சதாசிவம் : பேரவைத் தலைவரவர்களே, ஜெயங்கொண்டத்திலே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்கான கட்டிடம் பார்த்து அமர்த்தினார்கள். மேலும், அரியலூரிலே தற்சமயம் அடிஷனல் டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட் ஒன்றை ஏற்படுத்தி, வக்கீல்கள் அமரும் அந்த இடத்திலே விசாரணை நடத்திக்

1973 ஆகஸ்ட் 11]

கொண்டிருக்கிறார்கள். பொதுமக்கள் நீண்ட தூரம் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, உடனடியாக ஜெயங்கொண்டத்திலே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

Collection of Land Revenue and loans in Tiruttani taluk

* 90 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether instructions have been given to the District Collector of Chingleput to postpone the collection of land revenue and loans in Tiruttani taluk consequent on the failure of monsoon rains; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பல பகுதிகளில் வறட்சி நிலை நிலவுவது குறித்து முறையீடுகள் வந்ததன் பேரில் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு நிவாரண மளிப்பது குறித்து அரசு ஆலோசித்தது. வருவாய் வாரியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி வட்டத்தில் ஜூலை 1972 முதல் டிசம்பர் 1972 வரை நில வரி மற்றும் அரசாங்கக் கடன்கள் வசூலிப்பதை ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஆணையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பியதற்கு நன்றி. ஆனால், இப்பொழுது இந்த ஆண்டிற்குத் தேவையான வரி நிலுவையையும் கடன் பாக்கியையும் மட்டும் வசூல் செய்துவிட்டு, பழைய பாக்கி இருந்தால் அதை வேண்டுமானால் தள்ளிப் போடப்படும் என்னும்படியான உத்தரவை அரசு இட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால், அங்கே வருவாய்த் துறை அதிகாரிகள் மிகக் கடுமையான வகையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதைத் தவிர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்கம், எற்கெனவே பிறப்பித்திருக்கிற உத்தரவு, '1382-ஆம் பசலி ஆண்டில் செலுத்த வேண்டிய கடன் தவணை நிலுவைத் தொகையைச் சேர்த்து ஓராண்டுத் தவணை நிலுவைத்